13.10.2025

O.S.No.72/2011

வா.சா.1.திரு.அப்பாஸ் அலி, த.பெ. அப்துல் ராவுத்தர்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் பிரதிவாதிகள் அனைவரும் எனது உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது, 1ம் பிரதிவாதி எனது சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று அவருக்கு எதிராக மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். நாங்கள் சமமாக பிரித்துக் கொள்ள வேண்டும் என்று பேசி முடிக்கப்பட்டு எனது அப்பா எங்களுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் சமமாக பிரித்துக் கொள்ள வேண்டும் என்று பேசப்படவில்லை. எனது அப்பா தானசெட்டில்மெண்ட் எனக்கு எழுதிக் கொடுத்தார். தானசெட்டில்மெண்ட் ஆவணம் எங்கள் அனைவருக்கும் எனது அப்பா ஒரே நாளில் தான் பதிவு செய்து கொடுத்தார் என்றால் ஆமாம். என்னுடன் பிறந்தவர்கள் என்னை சேர்த்து 5 நபர்கள் ஆகும். எனது மூத்த சகோதரர் பெயர் காதர் ஜான், 2வது சகோதரர் பெயர் கமால் மைதீன் ஆகும். எனக்கும், பிரதிவாதிகளுக்கும் ஒதுக்கப்பட்ட சொத்திற்கு கீழ்புறமாக காதர் ஜான் என்பவருக்கும், கமால் மைதீன் என்பவருக்கு சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்ற விவரமும், 2ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்ற விவரமும் எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் கமிஷ்னர் அளந்தபோது தான் தெரிய வந்தது. நான் வழக்குரையில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் தான் பரிகாரம்

கேட்டுள்ளேன் என்றால் இல்லை. 41X10 அடி அளவுள்ள பாதை பொதுவானது என்று நான் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பொதுப் பாதை என்பதற்கான விளம்புகை பரிகாரம் வழக்குரையில் கேட்கப்படவில்லை என்றால் கேட்டுள்ளேன். நான் ஆக்கிரமிப்பு செய்தது குறித்து வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கமிஷ்னர் அளந்து ஆக்கிரமிப்பு உள்ளதாக சொல்லியுள்ள அறிக்கையில், பத்தி–4ல் தாவா பொதுப்பாதை அளப்பதற்கு முன் தாவா ஸ்தலத்தை நிர்ணயம் செய்ய எனது மாதிரி வரைபடத்தில் A என்று குறிக்கப்பட்ட வடபுற எல்லை இடத்திலிருந்து அளக்க ஆரம்பித்தார்கள். ஆனால், அந்த அளவையில் முன்னுக்கு பின் முரணாக வந்ததால் அந்த அளவையை நிறுத்திவிட்டு மேற்படி மனுதாரர், எதிர்மனுதாரர் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பிளாட் வரைபடத்தின் மூலம் அளவை மேற்கொண்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3. எங்களுக்கு கொடுக்கப்பட்ட பிளாட்டின் வரைபடத்தின்படி அளக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பிளாட் வரைபடமானது அங்கீகரிக்கப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கை சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் தென்வடல் 41 அடி நீளம் என்பதில் 41 என்பது திருத்தம் செய்யப்பட்டது என்றால் நான் திருத்தம் செய்யவில்லை. மேற்படி, ஆவணத்தில் மேற்படி திருத்தம் சம்பந்தமாக வரி பிளப்பு என்று எழுதவில்லை என்றால் நான் திருத்தம் செய்யவில்லை. 61 அடி என்பதை தான் 41 அடி என திருத்தம் செய்துள்ளேன் என்றால் இல்லை. 61 அடி இடத்தை பொதுப் பாதை என விளம்புகை செய்யக் கேட்டு இதே நீதிமன்றத்தில் O.S.No.297/2015–என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது

என்றால் சரிதான். மேற்படி, வழக்கில் 61X10 பாதையானது பொதுப் பாதை என விளம்புகை செய்யப்பட்டது என்றால் ஆமாம். மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு எனக்கு சாதகமாக 41X10 என்று பத்திரத்தில் உள்ளது சரிதான் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. பாதையானது 113/2–என உட்பிரிவு செய்யப்பட்டு எனது பெயரிலும், 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி ஆகியோர் பெயரில் பட்டா மாறியுள்ளது என்றால் பட்டா மாறவில்லை. 113/2 என உட்பிரிவு செய்யப்பட்ட இடத்தில் 2ம் பிரதிவாதி எந்தவொரு ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் செய்துள்ளார். நான் 2ம் பிரதிவாதி மீது உள்ள முன் விரோதம் காரணமாக வேண்டுமென்றே பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே, இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

/ஒப்பம்/
(திரு.பொ.மகாராஜன்.,M.L)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.